**Rates**

*Subscriptions :*
Inland Rs. 15-00 per year
Foreign Rs. 20-00 „ „
Single copy 40 cts. ( including postage )

*Advertisement :*
On application

*In Memoriam :*
Rs. 12-50 per insertion ( within 4 inches )

*Order Nisi :*
Rs. 15-00 for two insertions ( within 6 inches )


# The MORNING STAR

உதய தாரகை


Registered as a Newspaper (Established 1841). Published Every Friday

Vol. 128. JAFFNA, FRIDAY, 23RD AUGUST 1968. No. 32.


RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE


**Notice**

*Please Aooress :*

(1) All Editorial matter (excluding news) for the English pages) to : The Editor, The *Morning Star*, Vaddukoddai.

(2) All news to the News Editor Vaddukoddai.

(3) All Editorial matter for the Tamil pages to : The Tamil Editor, The *Morning Star*, Parsonage, Alaveddy

(4) All Business correspondence re Advertisements and Subscriptions and all remittances to :

The Manager, The *Morning Star* — A. Kadirgamar, Esq. College Lane, Vaddukoddai.


## PUBLIC RECEPTION TO Dr. D. T. NILES

The public of Jaffna accorded the Rev. Dr. D. T. Niles a reception on his being elected to the Praesidium of the World Council of Churches as one of its six Presidents last evening at 5-30 at the Town Hall, Jaffna. Mr. G. G. Ponnambalam, Member of Parliament for Jaffna, presided, and there was a representative gathering of Hindus, Muslims and Christians present.

*Mr. Ponnambalam*, in the course of his speech, said that he felt it was an honour to preside at that happy function, when they were felicitating a man of the calibre of Dr. Niles. Rarely does a country produce such a man. In his younger days he was the President of the World Student Christian Movement. Today he is Chairman of the Methodist Conference in Ceylon, of the East Asia Christian Conference, and a President of the World Council of Churches. Because of his reputation as a great preacher, the W. C. C. had invited him to be the substitute for Dr. Martin Luther King for preaching the inaugural sermon, and later elevated him to this position of honour and responsibility. Mr. Ponnambalam felt sure that Dr. Niles would be a unifying influence in the Council. He was a good representative of not only his own community, but of all communities in the Island and the entire Christian Church in the country. Mr. Ponnambalam recalled the great contribution Dr. Niles' father, the late Mr. W. D. Niles, had made to the life of the people. His religion brought about unity among people and did not create or perpetuate differences. The son was a true follower of his father's principles.

*Mr. K. Pooranampillai*, Principal of St. John's College, Jaffna, said that it was but fitting that a function to honour a person who had received international stature should be presided over by another international figure. Mr. Ponnambalam had brought great honour to Ceylon as its representative on the United Nations' Assembly. Mr. Pooranampillai recalled the words of the late Mr. S. D. Tampoe, Advocate, that the history of the Niles' family was as long as the river Nile. He then spoke of the service which D. T's. grand-father, the late Rev. D. P. Niles, and later his father, the late Mr. W. D. Niles, had rendered our people. The Rev. D. P. Niles had striven hard to build first Hartley College and then Jaffna Central College and also had served the Church well. Mr. W. D. Niles was a noted Christian gentleman, to whom everyone was a person. He treated all as his brothers. D. T. also had developed such an attitude in his relations with people. He had a brilliant record as a student and could have made his mark as a legal luminary. But God caught him by the scruf of his neck and called him to His ministry. In Serampore he secured a first class in the final examination for the B. D. degree. Neither before him nor since has any other person obtained a first class. D. T. had proved to be a good pastor and a capable administrator. As a theologian he was able to see Education in the right perspective. He was, therefore, an advocate for Community Schools. Mr. Pooranampillai then quoted several distinguished Christian scholars who had commended highly the sermons and writings of Dr. Niles.

*Mr. A. Anthony*, Proctor, congratulated Dr. Niles on being elevated to one of the most important positions in the world today. Dr. Niles had always intervened in all matters where there was need. He had helped the minorities and the oppressed. Mr. Anthony recalled that during the Satyagraha campaign waged by the Tamils in 1958 Dr. Niles helped the cause not by condemning the action of the majority but by urging forcibly the rights of the minority. Mr. Anthony also referred to the movement launched by the Pope for closer co-operation between the Protestants and the Roman Catholics. He was sure that the day was not far off when all Churches would be united under one banner.

*Dr. N. T. Sambanthan*, Medical Superintendent of the Co-operative Hospital, Moolai, said that he was inspired greatly by the sermon Dr. Niles preached at the W. C. C. Assembly at Uppsala, which he listened to in the radio. His sermons were always very inspiring. Yet people were drawn to D. T. Niles not mainly because of his scholarship, or brilliance, or attainments, but because of his common touch. "In spite of the fact that he meets and moves with great personalities of the world, he has not lost the common touch." He was personally interested in and concerned for the welfare of individuals. Also he was never in a hurry. Added to all these, there was someone at home waiting always to show her appreciation of what her husband was and was doing.

*Mudaliyar C. Muttuthamby*, in the course of his tribute, said that it was a matter of great joy that a gathering, representative of all communities in Jaffna, presided over by a Hindu was there to do honour to Dr. Niles. The Tamil community had produced great men from time to time, and Dr. Niles was one of them. While Egypt could boast of only one Nile, Ceylon could be proud of several Nileses. They were proud that Dr. Niles, the intellectual giant who had won international fame, was one of them. He was also a great patriot.

*Kathi M. M. Sultan*, representing the Muslim community, expressed joy at being able to take part in this function, because of his long and intimate acquaintance with the family of Dr. Niles. He had the highest regard and affection for the family. He had learned a good deal from Mr. W. D. Niles, Dr. Niles' father, to whom he was deeply obliged for the encouragement, help and inspiration he gave him in his professional work. He had always extended to him his advice and love. Mr. Sultan hoped that Dr. Niles's contribution to this country and to the World Church would become richer in the years to come.

*Dr. Niles*, in the course of his reply, expressed gratitude for this public expression of appreciation of his work. This was the second time when such an appreciation was expressed, the first being the occasion of his receiving a doctor's degree. He expressed his warm thanks to the organisers for this function. He also thanked Mr. Ponnambalam for the inspiration he had been all these years to the Tamil community and the patience with which he had shouldered the responsibility of representing them. Differences in political convictions and ideas there might be, but no one had the right to pull down what another had built. The hand of man against man was what was happening in the world today, specially in Czechoslovakia at the present moment. Why Russia should fear a small country was difficult to understand. In the last 30 years it was a common occurrence that the majority was usually afraid of the minority. There was no way out of such a situation unless those who had differences sat and talked together. Dr. Niles then said that for the next five years the World Council of Churches would study the question of what and who man is.

Mr. S. R. Kanaganayagam proposed a Vote of Thanks.

## NEW SALVATION ARMY HALL AT MEESALAI

We are happy to announce the opening of a new Salvation Army building at Meesalai. The Dedication Service will take place on Sunday, September 1, 1968, at 5-00 p. m. The public are invited to attend.

Colonel Burton Pedlar, Territorial Commander of the Salvation Army in Ceylon, will preside at the service.

## "LAND EVALUATION" SYMPOSIUM : AUSTRALIA

On invitation to participate in the "Land Evaluation" Symposium, organized jointly by U. N. E. S. C. O. and C. S. I. R. O. (Commonwealth Scientific and Industrial Research Organization) and to be held in Canberra, Australia, during the last week in August, is Prof. George Thambyahpillay of the University of Ceylon.

Prof. Thambyahpillay, who is also a U. N. E. S. C. O. Consultant, participated in 1965 in a U. N. E. S. C. O. "Arid Zone Geomorphology" study programme in Ceylon's Dry Zone. As a Consultant Prof. Thambyahpillay has also attended the U. N. E. S. C. O. Experts' Conference in Oxford University.

While in Canberra Prof. Thambyahpillay will have discussions with Prof. O. H. K. Spate (Institute of Advanced Study) and Prof. A. T. A. Learmonth (Geography) on programmed-studies on tropical environmental investigations to be carried out in tropical Australia and New Guinea in 1969 — 1970. Prof. Thambyahpillay will be attached to the Australian National University next year (1969 — 1970) as a Visiting Professor.

## SERVICE OF THANKSGIVING

A Service of Thanksgiving for the life of Caroline Thiraviam Jeyarajah, wife of Mr. E. J. Jeyarajah, retired Business Manager of the McLeod Hospital, Inuvil, was held at the C. S. I. Church, Chavakachcheri, last Wednesday, the 21st inst., at 5 p. m. The Rev. J. J. Ratnarajah led the service. The Lessons were read by Mr. I. P. Thurairatnam, a brother of the late Mrs. Jeyarajah, and Mas. Vijit Chinniah, one of her grandsons. Two special songs were sung, one by a group consisting of some members of the staff of Uduvil Girls' College and her son Mr. Reggie Jeyarajah and the other by her sons and daughters. The Bishop of the Jaffna Diocese, C. S. I., the Rt. Rev. Dr. S. Kulandran, preached the sermon and Miss A. H. Paramasamy, Principal of Uduvil Girls' College, paid a tribute to Mrs. Jeyarajah's life. The Rev. K. S. Jeyasingam led the Litany of Praise. The service came to an end with the benediction pronounced by Bishop Kulandran.

*Bishop Kulandran* based his sermon on 2nd Corinthians, chapter 5, verse 7: "For we walk by faith not by sight". He said that man was the only one among the living creatures on earth who had the privilege of having faith. If man lived only by seeing, what would be his lot? One could produce works of literature, or build cities, or rule kingdoms, but still life would be limited to a period of mere seventy to eighty years. It was the Christian conviction that man lived by faith and not by sight. The Bishop stressed that faith was not mere believing what was not true. There were some people to whom faith was only that. In the words of the book of Hebrews in the Bible, "Faith is the assurance of things hoped for, the conviction of things not seen. For by it the men of old received divine approval." Faith gave a certainty about the unseen. While the seen was temporary, the unseen was eternal. We could possess this kind of faith, because we know Him who has promised. Therefore, in the words of St. Paul, we ought to be of courage. Our citizenship is in heaven. Though we are now on earth, if we could live by our faith, we could have joy.

*Miss Paramasamy*, in the course of her tribute to the life of Mrs. Jeyarajah, said that Mrs Jeyarajah belonged to that class of people, who though unrecognised as the leaders or the big ones of the earth, nevertheless were the anointed of God. They had a covenant with God and in their day to day life in pursuing the duty assigned to them by God kept their promises to Him. Mrs. Jeyarajah was a mother in the fullest sense of the word. She came from a family of great Christian traditions and upbringing. Hence, it was no wonder that the home she ran — beautiful and hospitable — reflected her character fully. She learned to be efficient and careful about every thing from her student days at the Uduvil Girls' College. When she entered this school, it was in the golden era of its history. And the school made its mark on her. It helped her to use her talents fully and joyously, and even to multiply them. As Secretary of the Uduvil Old Girls' Association, she took an abiding and enthusiastic interest in its work and in all the activities of the school. All happenings in the school evoked a concerned and generous response from her. She regarded the school as her own. She loved the beautiful and ever laboured to make others happy. She exhorted others to practise unity and harmony among themselves and went about spreading friendship. Prayer was life to her. In her relations with her sons-in-law and daughters-in-law she proved to be a true mother to them, treating them as her own children. In all her doings she was motivated not by a sense of duty but by a compelling love.

## CORRECTION

Mr. and Mrs. K. Rasanayagam, of 2nd Cross Street, Jaffna, whose death we recorded in our issue of the 9th inst., leave behind Mr. R. Wijeysooriar, teacher at Tanjong Malim in Malaysia, and Mrs. Wijeysooriar, Mr. R. Jeyasingham, of the Telecommunication Department, Kuala Lumpur, and Mrs. Jeyasingham, (sons and daughters-in-law); Mr. R. Rajathurai, of the Local Government Service, Omantai, (son); Mr. N. R. Balasingham, Education Officer, Chavakachcheri, and Mrs. Balasingham, Mr. S. Sabaratnam, Irrigation Engineer, Anuradhapura, and Mrs. Sabaratnam and Mr. Francis, the District Court Secretary, Kalmunai, and Mrs. Francis (sons-in-law and daughters).

This information was inadvertently dropped [illegible]

## 12th ALL-ISLAND Y. M. C. A. BOYS' CAMP

The above Camp was successfully concluded on the 17th inst. at Trinity College, Kandy.

New features this year included a special session entitled "Know your Y", a 'Y. M. C. A. Membership Drive', "a Talent Contest", and "personal interviews" with the boys. The boys who were from the Protestant, Catholic, Buddhist, Hindu, and Islamic faiths were divided into 4 Houses named after 4 famous Y. M. C. A. personalities: George Williams, John R. Mott, Dalton McClelland and Eric Stinge.

On the opening night, the Campers were briefed on the lives of these personalities by Messrs. R. O. Buell, National General Secretary of Y. M. C. A's, and Hans Horst Ziller, Fraternal Secretary. This was followed by a film on the 1955 Paris Y. M. C. A. centennial celebrations.

Each day there was a 'theme' presented as a 'thought for the day'. These were "The Full Man", "Love", "Holiness", "Composure", "Sincerity" and "Responsibility". The Bible-study for Christians and Moral Instructions for non-Christians and the Play Acting sessions were based on these themes.

At the Membership Drive held on the last day, 6 boys from different Y. M. C. A.s spoke on their experiences as Y. M. C. A. members. At the end of this period all Campers who did not belong to any Y. M. C. A.s consented to join the Y. M. C. A. as soon as they got back.

A noteworthy feature in Camp this year was the Y. M. C. A. publication of the "Camp Chronicle". Copies of this publication were distributed to every one on the last day. The Chronicle included names of Campers and Staff, Messages from the National General Secretary and the Camp Director, Reports on all activities, Reports of Houses, Results of Competitions, Articles by Campers and Staff, and the Camp programme. (Copies of this publication can be had on request from the National Council of Y. M. C. A.s)

The rest of the activities included Indoor and Outdoor Games, Archery, Rifle shooting, a Quiz Contest, Mr. Camper and Wrestling Contests, Camp-Olympics, Campfire and Camp Concert. Mr. Marcus Navaratnarajah was the Camp Director and Mr. Harold Sithamparam, Assistant Camp Director.

## WEDDING

The marriage was solemnised at the Erlalai North Church (C. S. I.) on Monday, the 19th inst., at 4-30 p. m. of Mr. Sellathurai Palasingham Jeyasingham, Worker in charge of the Usan Church (C. S. I.) and son of the late Mr. S. Palasingham and Mrs. G. M. Palasingham of Chunnakam, and Miss Grace Pushpamany Rasiah, of the staff of Maha Vidyalaya, Erlalai, and daughter of Mr. and Mrs. V. E. Rasiah, of Erlalai North. The Bishop of the J. D. C. S. I., the Rt. Rev. Dr. S. Kulandran, officiated at the solemnisation, assisted by the Rev. S. S. Arulampalam. The Rev. J. J. Ratnarajah preached the homily. A reception followed at the bride's residence.

## CHRISTIAN INSTITUTE FOR THE STUDY OF RELIGION AND SOCIETY

Under the auspices of the Christian Institute for the Study of Religion and Society, the Rt. Rev. Dr. S. Kulandran, Bishop of the Jaffna Diocese, of the Church of South India, delivered a lecture on "The Linguistic School of Atheism" on Saturday, the 10th inst., at 4-30 p. m. at the Christa Seva Ashram, Maruthanamadam. Dr. W. L. Jeyasingham, the Chairman of the Institute, presided.

A Seminar was held at the Ashram last Saturday, the 17th inst., on "Compulsions of Hindu Culture in the Modern Scientific Age", from 9-30 a. m. to noon. The Rev. C. Arangaden, Translations Secretary of the Bible Society of India, delivered a lecture on the subject. Mr. S. Ambihaipagan, retired Principal of Valdeswara Vidyalayam, presided.

## AMERICAN HIGH SCHOOL STUDENT TO SPEND A YEAR IN VADDUKODDAI

Miss Brenda Grove, a fourteen year old, 10th Grade student from the Portales, Junior High School, New Mexico, arrived in Vaddukoddai last week and resides in the home of Mr. and Mrs. R. S. Thambiah [illegible] the Thambiahs and the Groves have been good friends for a long time and this visit further strengthens their ties and those between Jaffna and America. Mr. Pearce Grove, the father of Brenda, is the Librarian at the Eastern New Mexico University.

Brenda was a keen student of Mathematics, Art and Spanish and on her way to Ceylon she spent some time along with a group in Lisbon, Madrid, Rome and Athens, and flew straight from Athens to Colombo.

She intends to cover as much of Grade 10 work here, at the same time to learn Tamil language and culture, specially oriental music and dancing. She is also keenly interested in swimming and tennis. She is a member of the Methodist Church.

We are happy to record that Jaffna is able to reciprocate the American Field Service Programme for Ceylonese students by such invitations as this, at least in a private and personal way, and this valuable educational move by the Thambiahs and Groves, we hope, will lead to many more such exchanges between American and Ceylonese families.

## THE CEYLON BIBLE SOCIETY

### Special Bible Essay Prizes

The Ceylon Bible Society offers prizes for Seniors (15—18 years old) and Juniors (10—14 years old) for Essays of not more than 1500 words each to be written in English, Sinhala or Tamil and certified as the original work of the competitors by a parent or the School Principal on one of the following themes;

"What the Bible has done for me"

or

"How we use the Bible in our home".

All persons who wish to compete for these prizes will have to send the Essay with the proper application form supplied by the Ceylon Bible Society duly completed.

The prizes awarded will be Rs. 50/- for the best Senior essay in Sinhala, Tamil or English and Rs. 25/- each for the best Junior essay in Sinhala, Tamil or English. The prizes will be given in the form of orders for books on the Christian Religion to be ordered from the C. L. S. or the Corner Book Shop. Additionally, each prize-winner will be awarded a Bible for not more than Rs. 12/- by the Ceylon Bible Society.

Only essays sent with the completed application form received at the Bible House, 293, Galle Road, by 4-00 p. m. on September 30th, 1968, will be eligible and no correspondence or interviews will be granted on any matter concerning these essays except any elucidation necessary concerning these conditions.

The Prizes will be awarded at the Annual Meeting of the Ceylon Bible Society, to be held on Monday, 9th December, 1968.

CELESTINE FERNANDO,
Secretary.

The Bible House,
293, Galle Road,
Colombo 3.

## FROM FAR AND NEAR

### U. S. ORBITS NEW WEATHER-WATCH SATELLITE

A new weather-watch satellite, ESSA—7, went into orbit last Friday to take storm-cloud pictures around the world as the peak of the Atlantic and Pacific hurricane season nears. It was the seventh ESSA (Environmental Survey Satellite) and the 16th of the Tiros type to be launched successfully in a programme that dates back to mid—1960 and has seen no failures.

The National Aeronautics and Space Administration (NASA) said the new satellite is "operating normally" in an orbit only a few kilometers off the path that was planned for it. ESSA—7 is rolling along in orbit like a cartwheel, its cameras peering out from the rim. They are to take pictures as the earth comes into view once each revolution so that the craft will view weather all over the globe every 24 hours.

The pictures will be stored for transmission to stations at Fairbanks, Alaska and Wallops Island, Virginia, for relay to the National Environmental Satellite Center at Suitland, Maryland. There they will be incorporated into weather maps for worldwide distribution. It takes about three hours from the time the pictures are read to distribution by radio facsimile around the world.

The main purpose of the new satellite is to direct and track major tropical storms (hurricanes and typhoons) in time for advance warning to threatened nations.

In the past two and one-half years, 3,000 warnings based on weather satellite photographs have gone out from the Suitland Center to threatened areas, resulting in great savings of life and property worldwide. Officials believe that since 1963 no tropical storm anywhere in the world has escaped satellite detection.

## CHRISTIANS AND OTHER FAITHS

A plea that the Anglican Communion should pay greater awareness to other world faiths was made at the Lambeth Conference by the Archbishop of Perth, the Most Rev. George Appleton. He commented: "If we hope to present Christ to other faiths as the convergent point of all faiths, then we have to take their religions seriously. If we hope for a better world, for a better ordering of society, for social justice and for world peace, then we have to realise these things can only come about in large areas of the world through other religions. We have got to work in partnership with them, wherever this is possible without in any way soft-pedalling our faith in Jesus Christ. Dialogue with other faiths is of supreme importance if God's work in the world is to be done". He added that Christians had to realise that God could also carry out his work through people of other faiths. The Church must be prepared to learn from, and share experiences with, adherents to these faiths.

## ORDER NISI

### IN THE DISTRICT COURT OF JAFFNA

*Testamentary Jurisdiction*
*No. 2255*

In the matter of the intestate estate of the late Kamaladevi Rajaratnam of Sandilipay North, Sandilipay

Deceased

Veeragathy Rajaratnam of Sandilipay North, Sandilipay.

Petitioner,

Vs.

1. Rasuki Rajaratnam
2. Rajaratnam Kirupakaran
3. Rakini Rajaratnam, all three minors of Sandilipay North, Sandilipay appearing by their Guardian-ad-litem the 4th Respondent.
4. Ratnasingam Thevendran of Sandilipay North, Sandilipay.

Respondents

This matter coming for disposal before I. M. Ismail, Esq., District Judge, Jaffna on the 12th day of July, 1968 in the presence of Mr. Kandiah Gunaratnam, Proctor on the part of the Petitioner and the affidavit of the Petitioner dated 12th day of July, 1968 having been read.

It is ordered that the 4th Respondent above-named be and he is hereby appointed Guardian-ad-litem of the 1st to 3rd Respondents above-named for the purpose of these proceedings.

It is further ordered that the Petitioner above-named be and he is hereby declared entitled as the husband of the deceased above-named to have Letters of Administration to the estate of the deceased issued to him accordingly unless the respondents above-named or any other person or persons interested shall on or before the 4th day of September, 1968 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

It is further ordered that the Petitioner do produce the said minors in Court on the said date.

This 12th day of July, 1968.

*Sgd.* I. M. Ismail,
District Court, Jaffna.

Drawn by,
*Sgd.* K. Gunaratnam,
Proctor for Petitioner.

31 & 32


**FLOWERS**
FOR
ALL OCCASIONS
*Phone or write ;*
**Lane & Company**
P. O. Box 19
NUWARA ELIYA.
*Grams:* "LANES" — *Phone:* 376



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளிதோறும் வெளிவருவது

# உதயதாரகை

கிறிஸ்தவ வார இதழ்] Estd. 1841 [UTHAYATHARAKAI

மலர் 128 ] 23 — 8 — 1968 [ இதழ் 32

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்த ஜனத்துக்கும் இழிவாம்."

## வாழ்க மணமக்கள்

ஜெயசிங்கம் — புஷ்பமணி

சென்ற திங்கட்கிழமை (19-8-68) மாலை 4 - 30 மணிக்கு ஏழாலை வடக்குத் தேவாலயத்தில் அத்தியட்சர் கலாநிதி ச. குலேந்திரன் அவர்களால், மறைத்திரு. எஸ். எஸ். அருளம்பலம் அவர்களின் உதவியுடன் ஒரு பரிசுத்த விவாகம் நிறைவேற்றப் பட்டது.

மணமகன் :

திரு. செல்லத்துரை
பாலசிங்கம் ஜெயசிங்கம்

(தெ. இ. ச. உசன் ஊழியர் கன்னுகம் காலஞ் சென்ற திரு. செல்லத்துரை பாலசிங்கத்தின் மகன்)

மணமகள் :

செல்வி இறேல் புஷ்பமணி
இராசையா

(ஆசிரியை, ஏழாலை திரு. வி. ச. இராசையாவின் மகள்)

மறைத்திரு. ஜே. ஜே. இரத்தினராசா மணமக்களுக்கு நல்லுரை வழங்கினர்.

மணமகளில்லத்தில் உபசரணையும் மணமகனில்லத்தில் இரவு விருந்தும் நடைபெற்றன.

## நன்றிசெலுத்தும் ஆராதனை

கடந்த புதன்கிழமை (21-8-68) மாலை 5 மணிக்குச் சாவகச்சேரித் தேவாலயத்தில் மறைத்திரு. ஜே. ஜே. இரத்தினராசா அவர்கள் தலைமையில் காலஞ்சென்ற திருமதி கரோலின் திரவியம் ஜெயராசா பேரில் ஒரு நன்றி செலுத்தும் ஆராதனை நடத்தப்பட்டது. சோகமுறும் திரளான நண்பரும், சுற்றமித்திரரும் சமூகமாயிருந்தனர். திரு. ஐ. பி. துரைரத்தினம் (சகோதரன்) செல்வன் விஜிற் சின்னையா (பேரன்) ஆகியோர் வேதப்பாடங்களை வாசித்தனர். குடும்பத்தினரின் உருக்கமான கீதமும் இடம் பெற்றது.

அத்தியட்சர் கலாநிதி குலேந்திரன் அவர்கள் "நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம்" (II கொரி. 5 : 6) என்னும் பொருளில் அருளுரையாற்றும்போது நாம் காணப்படும் பொய்யானவைகளை நம்பி ஏமாறுகிறவர்களாயல்ல, காணப்படாத, வரப்போகும்மகிமையைக் குறித்த விசுவாசிகளாய் நடக்க வேண்டுமெனக் குறிப்பிட்டனர்.

செல்வி அரியம் ஹட்சன் பரமசாமி தமது பாராட்டுரையில், அம்மையாரது பாடசாலைக் காலத்திறமைகள், பாடசாலையில் இன்றுவரையுள்ள பற்று, அதன் வளர்ச்சியிலுள்ள அக்கறை, அழகிலும் புனிதத்திலுமுள்ள பிரீதி, மனைவியாய், தாயாய், சகோதரியாய், சினேகிதியாய், அயலாளாய் அவரிடத்திருந்த அன்பும், பண்பும், பக்தி விசுவாசத்தோடுகூடிய செபவாழ்வு, ஆலயத்துக்கண்மையில் வாழும் ஆசை, உபசரணை, அனுதாபம், மகிழ்ச்சி, பிறர்மேல் உள்ள கரிசனை ஆதியாம் நற்பண்புகளைப் பாராட்டினர்.

மறைத்திரு. கே. எஸ். ஜெயசிங்கம் அவர்கள் தோத்திரமாலையை நடத்தினர். அத்தியட்சரின் ஆசீர்வாதத்துடன் ஆராதனை முடிவுற்றது.

## ஆச்சிரம ஆண்டு விழா

நேற்று (22-8-68) மருதனாமடம் கிறிஸ்த சேவ ஆச்சிரம ஆண்டுவிழா சிறப்பாக நடைபெற்றது. காலை 6 மணிக்கு நடைபெற்ற நற்கருணை ஆராதனையை மறைத்திரு. சாம் அல்விறெட் நடத்தினர். அங்கிளிக்கன் சபையைச் சேர்ந்த மறைத்திரு. அல்விறெட் சின்னையா அருளுரை வழங்கினர்.

7-30 மணிக்கு 2 இந்துப் பிள்ளைகளும், ஒரு கிறிஸ்த பெற்றோரின் பிள்ளையும் சின்னண்ண திரு ஏழுக்காடப்பட்டனர். 8-30 மணிக்கு ஏழாலை வடக்குச் சபை வாலிபரால் நடத்தப்பட்ட தோத்திர ஆராதனையில் மூருங்கன் சபைக்குரு மறைத்திரு டி. எஸ். தர்மபாலன் அருளுரை வழங்கினர். 10 - 30 மணி தொடக்கம் நடைபெற்ற மகாநாட்டில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

மாலை 4-30 மணிக்கு கலாநிதி லூதர் ஜெயசிங்கம் தலைமையில் நடைபெற்ற பகிரங்கக்கூட்டத்தில் ஆச்சிரமத்தைச் சேர்ந்த செல்வன் செல்வநாதன் வேதப்பாடம் வாசித்துச் செபித்தனர். பிரித்தானிய மெதடிஸ்த சபைப் பிரமுகர் மறைத்திரு. ஜே. சி. பெனெற் பேசியபோது தாம் கலந்துகொள்ளக் கிடைத்தமையையும், கர்த்தருக்குள் ஒரே குடும்பமாய் யாவரும் காணப்படுவதையும் பாராட்டி, பிரி. மெதடிஸ்த சபையின் வாழ்த்தைத் தெரிவித்து ஆண்டவரிடம் ஒரு தாய் தன் பிள்ளைகள் இருவருக்கும், வலது இடதுபக்க உரிமைகேட்ட போது, அவர் அவர்களைப் பார்த்து தாம் பருகும் பாத்திரத்தில் அவர்களும் பருக முடியுமா என்ற கேள்வியை ஆதாரமாகக்கொண்டு அவர் தொண்டாகிய தேவையை நிறைவாக்கும் பணியைக் கதைகள் மூலம் விளக்கி, நமது பணமும் சேவையும் அவர் வழியில் செலவிடப் படும்போதே அவர் பாத்திரத்தில் பருக முடியுமென விளக்கி, நாம் சொல்லும் பதில் என்ன என வினவினர். கிறிஸ்து விரும்பியதைச் செய்வதாலும், அவரைப் பின்பற்றுவதாலேயுமே உலகெங்குமுள்ளவர்கள் ஒரே குடும்பமாக வாழும் அனுபவம் பெறுவரென அவர் குறிப்பிட்டனர்.

அடுத்துப் பேசிய செல்வி. எம். பி. டேசர், தம்மிடம் சென்ற நியாயசாஸ்திரிக்கு ஆண்டவர் சொன்னபடி ஆச்சிரம வாசிகள் நடப்பதையும், வணக்கமுறை, சபை ஐக்கிய சாதனை, அடக்கமான வாழ்க்கை, ஆண்டவரின் மீட்பின் வல்லமையை அனேகருக்குக் காட்டல், புதிய தன்மை பெற்று ஆண்டவரைச் சேவிக்கப் பிறரை வழிநடத்திய பெருமை ஆகியவைகளைப் பாராட்டி, ஆண்டவரின் அன்பில் நிலைத்திருக்கப் புத்திகூறினர்.

சின்னண்ணன் நன்றியுரை கூறினர்.

## வண. கலாநிதி நைல்ஸுக்கு யாழ்ப்பாணத்தவரின் பாராட்டுதல்கள்

உலக திருச்சபை மன்றங்களின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட வண. நைல்ஸுக்கு நேற்று (22-8-68) யாழ் மாநகரசபை மண்டபத்தில் ஒரு வரவேற்பு உபசரணை நடைபெற்றது.

கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசிய திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், நாம்இன்று கலாநிதி நைல்ஸைப் பெருமைப்படுத்த ஈண்டுக் கூடியுள்ளோம். ஆனால் உண்மையில் யாழ்ப்பாணத்தவரை அவர்தான் பெருமைப் படுத்தியுள்ளார் என்றார். நீதி வழுவாத நைல்ஸ், மனவுறுதி படைத்த நைல்ஸ், பல்லாண்டு வாழ்ந்து இலங்கையின் ஒருமைப் பாட்டுக்கு உழைக்கவேண்டுமென்றும், தற்பொழுது அவர் ஏற்றிருக்கும் மெதடிஸ்த திருச்சபைப் பீடம் அதற்கு வழிவகுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

திரு. கே. பூரணம்பிள்ளை நைல்ஸ் சந்ததியின் வரலாறு நைல் நதியைப்போல் நீண்டதென்றார். வண. டி. பி. நைல்ஸ், திரு. ஜி. சி. எபி. நைல்ஸ் போன்ற பெருந்தகைகளின் சந்ததியில் வந்த டி. ரி. நைல்ஸை ஆண்டவர் தமது சேவைக்கு அழைத்துக் கொண்டார் என்றார். உலகத் தலைவர்கள் கலாநிதி நைல்ஸைப்பற்றிக் கூறிய விடயங்களைப் பிரதிசெய்து படித்துக்காட்டிய திரு. பூரணம்பிள்ளை அவரின் வித்துவப் பெருமையைச் சபையினருக்குத் தெளிவாக எடுத்து விளக்கினர்.

டொக்டர் என். ரி. சம்பந்தன் நைல்ஸின் வித்துவத் திறமையை விட, அவரிடம் பொதிந்துள்ள பண்புதான் மிகப்பெரிது என்றார். உலகத் தலைவர்களில் ஒருவராக விளங்கும் நைல்ஸ் அவர்கள், அவசர வேலையுள்ளவராகவோ, பெருமை படைத்தவராகவோ தன்னைக்காட்டிக் கொள்வதில்லை என்று கூறினர். முதலியார் முத்துத்தம்பி உலக சமயங்கள் யாவும் ஒன்றேயெனவும், மத்திய கல்லூரியில் கற்ற பாசத்தால் இன்று இக்கூட்டத்தில் பங்கு எடுத்துக்கொள்கிறேன் என்றும் கூறினர். முத்துக்குமாரசாமி, ஆனந்தகுமாரசாமி, இராமநாதன், அருணாசலம்போன்ற பெரியார்களின் வரிசையில் வைத்து எண்ணக்கூடிய அறிஞர் இருவர் இன்று மேடையில் வீற்றிருக்கிறார்கள் என்றார், காதி எம். எம். கல்தான் பேசுகையில்திரு. ஜி. ஜி. நைல்ஸ் மீது கொண்ட அன்பினுற்றான் தான் அவர் தமயனுக்குப் புகழ்மாலை சூடவந்தேன் என்றார். திரு. ஏ. அந்தனி கத்தோலிக்கர் சார்பில் பாராட்டுதல்கள் கூறினர்.

உபசரணைக்குப் பதிலளிக்கையில் த. கலாநிதி நைல்ஸ் இன்று இலங்கை மட்டிலுமன்றி உலகம் முழுவதுமே காணப்படும் முக்கிய அம்சம், 'பெரும்பான்மையினர் சிறுபான்மையினருக்குப் பயப்படுவதுதான்' என்றார். ஓர் அரசியற் கட்சி, இன்னொரு அரசியற் கட்சிசெய்யும் வேலையை நாசம் செய்யக் கூடாது எனறும், அரசியல் நடவடிக்கைகளின் காலம் மலையேறி விட்டதென்றும் இனி அரசியல்வாதிகள் ஒருங்கே அமர்ந்து மனம்விட்டுப் பேசுவதுதான்பிரச்சினைகள் தீர வழியென்றும் அவர் கூறினர்.

திரு. எஸ். ஆர். கனகநாயகம் நன்றியுரை வழங்கினர்.

## 35 ஆசிரிய பதவிகள்

கல்வித் திணைக்களத்தால் அடுத்த தவணை 35 பட்டதாரிகள் ஆசிரியர்களாக நியமிக்கப்படுவர். இப்பதவிகளில் 7, கல்வியை விசேடமாகக் கற்ற (B. Ed) பட்டதாரிகளுக்குப், மிகுதி கலைப் பட்டதாரிகளுக்கும் வழங்கப்படுமெனத் தெரியவருகிறது.

> இறைவன் நமது விடுதலை குறித்துக் கருணை பொழிந்த வண்ணம் இருக்கிறான். நம்மை உய்விக்க அவன் படும் பாட்டுக்கோர் அளவில்லை.

## இரட்சணிய சேனைத் தளபதி

இரட்சணிய சேனைத் தலைவராகிய தளபதி விறெடறிக் கூட்டே அவர்கள் நவம்பர், டிசம்பர் மாசங்களில் இலங்கை, இந்தியாவைத் தரிசிக்கவிருக்கிறார். நவம்பர் இறுதி வாரத்தில் (23 – 28) இலங்கையைப் பார்வையிடுவார். பின்னர் திருவாங்கிரத்துக்கும் அங்கிருந்து தமிழ் நாட்டுக்கும் செல்வார்.

## இந்தியாவில் ஹரிசனர் நிலை

இந்திய அரசாங்கத்தின் உணவு அமைச்சரும், ஒரே ஒரு ஹரிசன அங்கத்தவருமான திரு. ஜெகஜீவன் ரும் அவர்கள் ஹரிசன கிறிஸ்தவர்கள் கூட்டமொன்றில் உரை நிகழ்த்தியபோது, "சட்டமூலம் நீக்கப்பட்டுள்ள இந்த சாதியமைப்பில் தீண்டாதார் எனச் சொல்லப்படும் ஹரிசனர்கள் கிறிஸ்தவர்களான பின்பும் குறைவாகக் கணிக்கப் படுகிறார்கள்; ஒரு இந்து வேறு மார்க்கத்தைத் தழுவியபோதும், அவரது சாதியுணர்வு அவரோடு நிழலாகப் பின் செல்லுகிறது" [illegible]

## புனித தோமஸ் கல்லூரியின் புதிய உப அதிபர்

குருத்தலாவைப் புனித தோமஸ் கல்லூரியின் அதிபராக விளங்கி அரும்பணி புரிந்த திரு. பிறுன் ஜயசிங்க செப்டம்பர் மாதந்தொடக்கம் கொழும்பு புனித தோமஸ் கல்லூரியின் உப அதிபராகப் பொறுப்பேற்கிறார். அப்பதவியிலிருந்து சில காலம் பயிற்சிபெற்றுப் பின் கல்லூரியின் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்வாரென விஷயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

## இருளில் பார்வை அளிக்கும் அரிய சாதனம்

கடும் இருளில் தல்லியமான பார்வையளிக்கும் நவீன சாதனத்தை பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள். இந்த புதிய சாதனம் சமீபத்தில் பிரிட்டிஷ் தொழில் நுட்ப அமைச்சின் ஆராய்ச்சி நிலையத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டது.

'பார்வை பெருக்குமானி' என்று அழைக்கப்படும் இந்தச் சாதனம் ஒரு சிறிய ஒளிக்கீற்றையும் 50, 000 தடவைபெருப்பித்து பார்வைப் புலனைத் தெளிவாக்கிவிடும் அபார சக்தி படைத்தது. இரவில் நட்சத்திரங்களிலிருந்து பெறப்படும் மங்கிய தெளிவற்ற ஒளியைக் கூட பட்டப்பகல் போன்று பிரகாசமாகக் காட்டி, பாவிப்பவருக்குத் தல்லியமான பார்வையை அளிக்கும்அதிசய சாதனம் இது.

கண்ணடிபோன்ற இந்தச் சிறிய கருவியைக் கண்களில் மாட்டிக்கொண்டு 'கும்' இருட்டிலும் கூசாமல் நடந்துசெல்லலாம்.

## மயிலிட்டி மீன்பிடித் துறைமுகம்

பல காலமாகத் தாமதப் பட்டிருந்த மயிலிட்டி மீன் பிடித் துறைமுக வேலை கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பொறியியல் கூட்டுத்தாபனம் மேற்கொண்டுள்ள இம்மீன்பிடித்துறைமுக வேலையைக் காங்கேசன்துறை பட்டின சபை உப தலைவர் திரு. சிவனடியார் ஆரம்பித்து வைத்தார்.

பதினைந்து லட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படவிருக்கும் இம்மீன்பிடித் துறைமுகம் இரு ஆண்டில் பூர்த்தியாகுமெனத் தெரியவருகிறது.

ஐந்து தொன் நிறையுள்ள 3000 பாரக் கற்கள் இவ்வேலைக்கு தேவைப்பட்டதாகவும், இப்பாரக் கற்கள் எடுப்பதில் சிரமம் ஏற்பட்டதால் வேலை தாமதப்பட்டதாகவும், இக்கற்களைக் கொங்கிறீற்றில் செய்து உபயோகிக்கப் பொறியியல் கூட்டுத்தாபனம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

## நவீன பஸ்நிலையம் விரைவில் அமைக்கப்படும்

இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாய் செலவில் யாழ்ப்பாணத்தில் ஒரு நவீன பஸ் நிலையத்தினை நிறுவுவது சம்பந்தமாக நடந்த பேச்சுவார்த்தைகள் பயன் அளித்துள்ளன. இந்த பஸ் நிலையம் அமைப்பதில் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கும், யாழ்ப்பாணம் மாநகர சபைக்குமிடையில் ஒரு சமாதான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்சமாதான ஒழுங்கின்படி இ. போ. சபையினர் வருடம் ஒன்றுக்குப் பத்தாயிரம் ரூபாய் மாநகர சபைக்குக் கொடுப்பதற்கும், அதே வேளையில் புதிய பஸ் நிலைய அமைப்புக்கு வேண்டிய நிலத்தை நெடுங்காலக் குத்தகையில் மாநகர சபையிடம் இருந்து இ. போ. சபை பொறுப்பேற்பதற்கும் சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது. விரைவில் புதிய பஸ் நிலையத்திற்கான பூர்வாங்கவேலைகள் ஆரம்பிக்கப் படும்.

## மாணவ ஆசிரியர்கள் நியமனம்

இலங்கை முழுவதிலும் உள்ள பாடசாலைகளில் வரும் செப்டம்பர் மாதம் முதலாம் திகதியிலிருந்து நாலாயிரத்து இருநூறு மாணவ ஆசிரியர்கள் பதவி ஏற்கவிருக்கின்றனர்.

1966 ஆம் ஆண்டில் நடத்தப் பெற்ற [illegible] ஆசிரியர் பரீட்சைகளில் சித்தியடைந்தவர்களுக் கிடையிலான நேர்முகப் பரீட்சை பிராந்தியக் கல்வி அலுவலகங்களில் அண்மையில் நடைபெற்றதைத் தொடர்ந்து, நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான நியமனக் கடிதங்களைக் கல்வியமைச்சு அனுப்பி வருகின்றது.

ஆங்கிலமாணவ ஆசிரியராகத் தெரிவு செய்யப்பட்ட பலருக்கு நியமனக்கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, அவர்களுக்கான பயிற்சிவகுப்பு கடந்த திங்கள் முதல் யாழ்ப்பாணம் வேம்படிப் பாடசாலையில் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. ஆங்கிலம் தவிர்ந்த ஏனைய பகுதி மாணவ ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்கள் மிக விரைவில் பரீட்சார்த்திகளுக்குக் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. செப்டம்பர் முதல் திகதியிலிருந்து இவர்கள் தொடர்ந்து நியமனம் பெற்றுக்கொள்வார்கள்.

## மனிதனை இயக்கும் சக்தியெது ?

தொகுப்பு : S. S.

மனிதனுடைய இயக்கங்களையும் நடத்தைகளையும் நிர்ணயிக்கும் சக்தியெது என்பது இன்னும் தீர்க்கப்படாத பிரச்சினை. உளவியல் அறிஞர்கள் கூறும் கருத்துக்கள் சுவாரஸ்யமானவை. அவற்றில் சிலவற்றைத் தருவோம்.

**சுபாவம் :**

மண்டூகல் என்ற உளவியல் அறிஞர் மனிதனுடைய மூலை சில சுபாவங்களை அலலது பிறவிக் குணங்களைக்கொண்டு விளங்குகிறது. பிறவிக் குணமே சகல சிந்தனைகளையும் நடத்தைகளையும் தூண்டும் சக்திகளின் திறவுகோலாக விளங்குகிறது என்பார்.

**தன் நினைவற்ற மனம் :**

பிறொய்ட் என்ற அறிஞர் மனிதனுடைய சிந்தனையில் உணர்வுள்ள மனம், முன்னுணர்வுள்ள மனம், தன் நினைவற்ற மனம் என மூன்று அடுக்குகள் உள்ளனவென்பார். தன் நினைவற்ற மனம் நிறைவேறாத ஆசைகளையும், கோபதாபங்களையும் கொண்டு விளங்குகிறது. அவை ஐந்து வயதிற்குள் பூர்த்தியாகி விடுகின்றன, எனவே ஐந்து வயதிற்குள் நடைபெறும் சம்பவங்களே தன்நினைவற்ற மனதுள் அடங்கி மனிதனின் பிற்கால வாழ்க்கையை நிர்ணயிக்கின்றன என்பது இவருடைய சித்தாந்தம்.

**மனிதனுடைய தேவைகள் :**

மார்ஸ்லோ என்ற உளநூல் அறிஞர் மனிதனுக்குப் பல தேவைகள் இருக்கின்றன; அவற்றை நிறைவேற்றும்வண்ணமாகச் சிந்தனை மேற்கொள்ளப்படுகிறதென்பார். மனித தேவைகளை அவர் சரீர தேவைகள், பாதுகாப்பு, அன்பு, மதிப்பு தன்னிறைவு என்ற அடிப்படை' யில் ஒழுங்குசெய்தார். இவைகளில் மனிதனுடைய சிந்தனை முதலில் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்ய முயலுகின்றன என்றும், அவை பூர்த்தியானுற்றான் அடுத்த தேவையில் கவனம் ஏற்படும் என்றும் கூறினர். உதாரணமாக இவ்வரிசையிலே முன்னுக்கு நிற்கும் அன்புத் தேவை நிறைவேறினுற்றான மனிதன் தன் மதிப்பை உயர்த்துவதற்கு முயற்சிப்பான் என்பது அவர் முடிபு.

**இயக்கங்களின் சுயாதீனம் :**

ஆல்பேர்ட் என்ற அறிஞர் இயக்கங்கள் சுதந்திரமானவை; சமகாலத்திய சம்பவங்களினாலும், தேவைகளினாலும் நிர்ணயிக்கப் படுகின்றன; முன்பிருந்த தேவைகளினால் உருவாக்கப்பட்டாலும் பின்னர் சுயாதீனமாக எழுகின்றன என்றுரைப்பார். முன்னர் கீர்த்திபெறப் பணம் வழங்கியவன், கீர்த்திபெற்றபின்னரும் பணத்தை வழங்கிக்கொண்டிருப்பதைப்போல நோக்கம் மாறியபின்னர் சுதந்திரமாக எழுகின்றன. முன் தேவைகள் வழிவகுத்தாலும் இப்பொழுது காரணம் அவையல்ல என்பார்.

---

## உக்கிராணத்துவம்

HI-Y Club Secretary
(Navaly Y. M. C. A.)

நாம் அனைவரும் கடவுளின் திருக்குழந்தைகள். இதனால் அனைவரும் சகோதர சகோதரிகள். இதனை நாம் வாழ்க்கையில் நிரூபித்துக் காட்ட வேண்டுமேயாயின் நாம் நம்மையுயர்த்தி நமது உக்கிராணக் கடமையைச் சரிவரச் செய்ய வேண்டும். அது அவசியமும் கூட.

மனிதன் மானிட சமுதாயத்தில் இருந்து உண்டான ஒரு செடி. அவன் சமுதாய பிராணியாகச் சிருஷ்டிக்கப் பட்டிருக்கின்றான். அவன் சங்கமாக சேர்ந்து தான் வாழமுடியும். சமுதாயத்தின் அன்பும் ஒற்றுமையும் கூட்டுறவும் அவனுடைய சுபாவத்தை மேலும் மேலும் உயர்த்துகின்றன. புனிதமடையச் செய்கின்றன. அச்சமுதாயத்தைச் சிதைவுபடாமல் காப்பாற்றும் உப்பே கிறிஸ்தவன். கிறிஸ்தவ பணியாளனுகிய அவனிடத்தில் அவனது ஆற்றலுக்கு அமைவாக இறைவன் பற்பல கிருபையுள்ள ஈவுகளை அருளிச் செய்திருக்கின்றார். அவ்வீவுகளைப் பெருக்கும் உக்கிராணக் காரன் கிறிஸ்தவன். கடவுள் அருளிய தாலந்துகளாகிய சொத்தின் உரிமையாளன் அல்ல. அவைகளின் பொறுப்பு வாய்ந்த உக்கிராணக்காரன்.

எனவே அவன் திருச்சபை, தேசம், மானிட சமுதாயம், ஆகிய மூன்று துறைகளின் மூலமாகத்தான் தொண்டாற்றி அவைகளையே பயன்படுத்துதல் வேண்டும். சுக, நன்மைகளை இலட்சியமாக வைத்துக் கொள்வதினால் மட்டும் மனிதன் உயர்ந்து விடமாட்டான். அன்பு நிறைந்தவனுக மாட்டான். பெருந்தன்மையுடையவனுக மாட்டான். தெய்வீக புருஷனுக மாட்டான் அவனவன் அவனவனுக்கே என்ற கொடிய வாசகம் அடியோடு அழிக. இவ்வாசகம் உருவாக்கும் அடிமைச் சமுதாயம் ஒழிக. இதனால் அன்றோ உலகிடைப் பெரும் பூசல்களும் நாசமோசங்களும் நிகழ்கின்றன. பணம் பணம் என்னும் பேய்த்தனமென்ன, சாதிக் கர்வமென்ன, மிருகபலமென்னும் இராணுவ பலமென்ன, ஆகிய இவைகளால் கிறிஸ்தவ அன்பின் உக்கிராணத்துவம் கற்றூணில் எதி கண்ணுடிக் கலசுகளாகின்றன.

வாழ்விலும் சரி,தாழ்விலும்,சரி வாய்மையுடையவனுக உக்கிராணக்காரன் தொண்டாற்றல் வேண்டும்.

திருச்சபையின் ஊழியக்காரன் தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரன். நித்தியானந்த தேவனுடைய மகிமையான நற்செய்தி அவனிடத்தில் ஒப்புவிக்கப்பட்டுள்ளது. தேவவசனத்தின் இரகசியத்தைப் பூரணமாய்த் தெரியப்படுத்துதல் அவன் மேல் விழுந்த கடமை ஒப்புவிக்கப்பட்ட இம் மாபெரும் பணியின் பொருட்டு அவன் நல்ல போதகராக நீதிமானுக்கு நீதிமானுக, பெலவீனருக்கு பெலவீனனுக, எல்லாருக்கும் எல்லாமாக அமைந்து பணியாற்றுதல் மாபெருங்கடன். பசி – தாகம் – நிர்வாணம் - துன்பம் - துயரம் ஆகிய இவைகளின் ஊடே அவனுக்கு ஒத்தாசைவேண்டும்போது நல்லுயர் பர்வதம் யேசு அன்றோ.

உலகம் முழுவதையும் நீ ஆயத்தப்படுத்திக் கொள்ள விரும்பினாலும் உன் ஆத்மாவை நீ இழந்தால் அதனால் உனக்கென்ன பயன்? ஆண்டவன் கிருபையாய் அளித்த எல்லா ஈவுகளும் அவருடையதே. கடவுளுடையதைக் கடவுளுக்கே அர்ப்பணி. உன் முத்றபலன் அனைத்தும் ஆண்டவன் திருவடிச் சொத்து. அவற்றைக் கொண்டு வாருங்கள் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்பது தெய்வத் திரு அழைப்பு இதோ! நியாயத்தீர்ப்பு நாள். அன்று உனது உக்கிராணக் கணக்கை ஒப்புவி என்ற தெய்வ கட்டளைக்கு எப்படித் தப்பிடுவாய், தனது ஒரே குமாரனைத் தந்தருளி உன்மேல் இவ்வளவாய் அன்புகூர்ந்த கடவுளுக்கு நீ உண்மையும் உத்தமுமான ஊழியக்காரனுக அமைதல் வேண்டும். அவ்வூழியத்தை இன்றே செய்யவும் வேண்டும். பின்னைக்கென்று நீ பின்னிடுவதை விலக்கவும் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயதாரகை
UTHAYATHARAKAI
1968 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மீ 23 ஆம் நாள்

# நமது நற்செய்திப்பணி தாழ்வுறுவதேன் ?

"இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் சொன்ன தேவன், இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப் பண்ணும் பொருட்டாக எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார் (ii கொரி 4 : 6) எனப் பவுலப்போஸ்தலன் கொரிந்தியருக்கு எழுதினார். தெய்வ ஒளி நமக்குள் பிரகாசிப்பதெல்லாம் அவர் மகிமையை வெளிப்படுத்துவதற்காம். அந்த மகிமை வெளிப்படவில்லையெனில் நம் வாழ்வில் ஏதோ தவறிருக்க வேண்டும். மூடி வைத்திருக்க வேண்டும். அதால் அது மங்கி மறைய வேண்டும்.

அது சுடர் விடுவதானால் சும்மாயிருக்க முடியாது. சொல்லிச் சொல்லிச் சுவைத்தொறும் சுவைத்தொறும் இன்பம் நுகரவேண்டும். அப்படி நடைபெறவில்லையே. ஏன்? அந்த மகிமையின் வடிவாகிய கிறிஸ்து நம்மில் வெளிப்படவில்லையே. ஏன்? நம் வாழ்வில், பேச்சிலோ செயலிலோ அவர் தன்மை காணப்படவில்லையே. ஏன்?

